**சுகாதாரப் பணியாளர்களுக்கான வழிகாட்டி**

## பொருளாதார நெருக்கடியின் போது குழந்தைகளுக்கான போஷாக்குத் தலையீடுகளுக்கு முன்னுரிமை அளித்தல்

பொருளாதார நெருக்கடியின் போது குறிப்பாக **5 வயதுக்குட்பட்ட** குழந்தைகள் போஷணைப் பிரச்சனைகளால் பாதிக்கப்படலாம்.

ஒரு குழந்தை வளர்ச்சிப் பிரச்சனை அல்லது வளர்ச்சிப் பிரச்சனையை எதிர்நோக்கும் போக்கை இப் பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தின் போதும் கூட எதிர்கொண்டால் வயது வந்தோருடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் சிறிய அளவிலான உணவு தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு அநேகமாக உணவுப் பற்றாக்குறை முக்கிய காரணமாக இருக்காது. எனவே, மிகவும் முக்கியமான அடிப்படைக் காரணங்களை அடையாளம் காண முன்னுரிமை கொடுங்கள், காரணம் மாற்றக்கூடிய வேறு முக்கியமான காரணிகள் இருந்தாலும் கூட, வளர்ச்சிப் பிரச்சனைகளுக்குக் உணவுப் பற்றாக்குறைதான் காரணம் என பராமரிப்பாளர்கள் எண்ணும் போக்கைக் கொண்டிருப்பதால்.

1. **வளர்ச்சிப் போக்கை சரியாக அடையாளம் காணவும்.**
2. **வளர்ச்சியில் சிக்கல் இருந்தால், MOH ஆல் பார்க்கும் வண்ணம் குழந்தையை CWC க்கு பரிந்துரைக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்யுங்கள். வளர்ச்சி பிறழ்வுகளை (Growth Faltering) ஆரம்பத்திலேயே நிறை எடுக்கும் இடத்திலேயே நிவர்த்தி செய்ய வேண்டும்.**

3. **வளர்ச்சி பிறழ்வுகளுக்கான தலையீடுகள்**
   I. குழந்தையின் உணவு உட்கொள்ளலை பாதிக்கக்கூடிய கடுமையான நோய் அல்லது சமீபத்திய உணர்ச்சி சூழல் மாற்றங்களை இனம் கண்டு விலக்கவும்.

   II. 24 மணிநேர உணவூட்டல் சரிதையை நினைவுகூர்ந்து ஆலோசனைக்குச் செல்வதற்கு முன் அதை பகுப்பாய்வு செய்யுங்கள் - **பல குழந்தைகளுக்கு அவர்களின் உணவு முறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுகள் இருக்கலாம், அவை எளிதில் மாற்றக்கூடியவை.** எனவே சரியான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து மிகவும் பொருத்தமான தலையீட்டைப் பரிந்துரைக்கவும்.

   உணவுப் பற்றாக்குறை இருந்தாலும், வளர்ச்சி பிறழ்வுகளுக்கான சில பொதுவான காரணங்களை (உணவு தயாரித்தல் வழிமுறைகளில் ஏற்படும் சில குறைபாடுகள், எதிர்மறையான உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றன) உங்களால் தீர்க்க முடியும். உ-ம்

   a. பிள்ளையின் வயதுக்கு ஏற்ப உணவின் திண்மத் தன்மையை சரிசெய்யலாம்
   b. உணவின் சக்தி அடர்த்தி குறைவாக இருந்தால் அதை சரிசெய்யலாம்.
   c. பிள்ளையின் ஒரு வேளை உணவின் அளவு குறைவாக இருந்தால் (அடிக்கடி பானங்கள்/ஜங்க் ஃபுட்/இனிப்புகள்/ குழந்தையின் பசியைக் குறைக்கும் கொழுப்பு நிறைந்த உணவுகள் போன்றவற்றை உண்பது பிரதான உணவு வேளைக்கு சிறிய அளவிலான உணவை உட்கொள்வதற்கான அடிப்படைக் காரணங்களாகும்.)

   III. மீண்டும் மீண்டும் வரும் நோய்கள் அல்லது பாதகமான சமூக-உணர்ச்சி-பொருளாதார சூழல் ஆகியவை போஷணை நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் எனவே இது பற்றி நீங்கள் விசாரிக்க வேண்டியிருக்கலாம்.

   IV. எதிர்மறையான நடைமுறைகளை (குறிப்பாக முறையற்ற உணவுப் பழக்கவழக்கங்களை) மாற்றுவதன் முக்கியத்துவத்தையும் இவை மாற்றியமைக்கக்கூடியவை என்பதையும் பராமரிப்பாளர்களுக்கு உணர்த்துவதற்கு உளவள ஆலோசனை வழங்குவது மிகவும் முக்கியமானது.

   V. சமீப கால வளர்ச்சியின் பின்னடைவுக்கு காரணம் உணவுப் பற்றாக்குறையாக இருந்தால், கிடைக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு குழந்தையின் உணவை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த உளவள ஆலோசனைகளை வழங்க முயற்சிக்கவும். குழந்தைகளுக்கு ஒப்பீட்டளவில் சிறிய அளவிலான உணவே தேவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும், எனவே பல குடும்பங்களால் இந்த உணவு அளவை வழங்க முடியும். மேலும், தேவையான அனைத்து சுகாதார சேவைகளும் (நோய்த்தடுப்பு மருந்துகள் குறைநிரப்புகள் போன்றவை) வழங்கப்படுவதை உறுதிசெய்யவும், வீட்டுப் பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான பல்துறை உதவிகளுக்காக அத்தகைய

குடும்பங்களின் நிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவருவதன் மூலம் சுகாதாரம் தொடர்பற்ற துறைகளின் ஆதரவைத் ஆரம்பிக்க வேண்டும்.

4. **குழந்தைகளின் போஷணைத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

I. **வழக்கமான நடவடிக்கைகள்** - நுண்ணூட்டச் சத்துக்களை வழங்குதல், குறைநிரப்பு உணவு வழங்குதல் மற்றும் பிற ஆதரவு சேவைகள் உள்ளிட்ட வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு ஆகியவை மேம்படுத்தப்பட்டு வழக்கமான முறையில் பின்தொடரப்படல் வேண்டும்.

**வழக்கமான சேவைகளைச் செய்வதில் எதிர்பார்க்கப்படும் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும்.**

II. இலகுவாக பாதிப்படையக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் கீழ்வரும் ஒழுங்கில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்

- **போஷணை/மருத்துவ பாதிப்புடைய**
- பொருளாதார பாதிப்புள்ள குடும்பங்கள்
- உளவியல் பாதிப்புள்ள

**(இவ்வாறான பாதிப்புடைய குழந்தைகளை எவ்வாறு அடையாளம் காணல் என்பது பிரி III இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)**

**III. பாதிப்புடைய குழந்தைகளை எவ்வாற அடையாளம் காணல்?**

**மருத்துவ/போஷணைப் பிரச்சனைகள்** - CHDR இல் உள்ள வளர்ச்சி விளக்கப்படங்களைப் பயன்படுத்தவும் மற்றும் CHDR இல் சிறப்பு கவனிப்புக்கான காரணங்களின் பட்டியலையும் பயன்படுத்தலாம்.

இவற்றில், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது **குடும்பப் பொருளாதாரப் பாதிப்பு**

**உளவியல் சமூகப் பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு** முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். CHDR இல் உள்ள Z குறியீட்டை (வீட்டு ஆபத்து காரணிகள்) பயன்படுத்தி பொருளாதார ரீதியாக மற்றும்/அல்லது உளவியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் அடையாளம் காணல் வேண்டும்.

பொருளாதார பாதிப்பு – Z குறியீடு 8

உளவியல் பாதிப்பு – Z குறியீடுகள் 1 முதல் 7, 9, 10 வரை

இது தவிர, போக்குவரத்து சிக்கல்கள் காரணமாக பாதிப்படையக் கூடியவர்களை முடிந்தவரை அணுகி அவர்கள் சுகாதார சேவைகளை பெற உதவ வேண்டும். தாய்மார்களின் ஆதரவுக் குழுக்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பிற தன்னார்வுக் குழுக்கள் இந்த சூழ்நிலைகளில் உதவ முடியும்

IV. PHM/MOH அலுவலகத்தில் பாதிப்புகள் உள்ள குழந்தைகளின் பட்டியலை (பொருளாதார பாதிப்புடன் கூடிய போஷணை / மருத்துவ பாதிப்பு (Z குறியீடு 8) மற்ற உளவியல் சமூக பாதிப்புக் காரணிகளுடன் அல்லது இன்றி) பராமரிக்கவும்.

V. **பாதிப்புகள் உள்ள குழந்தைகளை நிர்வகித்தல் -**

இந்தக் குழந்தைகள் உள்ள வீட்டுப் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான ஆதரவு உட்பட தகுந்த பரிந்துரை, குறைநிரப்புகள் மற்றும் பிற ஆதரவு சேவைகளைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறான பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களைத் தகுந்த சுகாதார/சுகாதாரம் அல்லாத சேவைகளுக்கு அனுப்புவது சுகாதார ஊழியர்களின்

பொறுப்பாகும். குறிப்பாக, பொருளாதார பாதிப்பு (Z code 8) உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு உணவு உதவி / வருமானம் உண்டாக்கும் நடவடிக்கைகளில் ஆதரவு தேவைப்படலாம்.

பிற வீட்டு ஆபத்து காரணிகளைக் கொண்ட குழந்தைகள் (அவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடியவர்கள்) அவர்கள் அத்தியாவசிய சுகாதார சேவைகளைப் பெறுவதை உறுதிசெய்ய நெருக்கமாகப் பின்தொடரப்படல் வேண்டும்.

**MCH ஊழியர்களால் ஊட்டச்சத்துக்கான மேலாண்மை / பராமரிப்பு படிநிலை மேலிருந்து கீழாக**

- **i.** SAM
- **ii.** MAM
- **iii.** மெலிவடைதலுக்கான (Wasting) அபாயத்துடனான வளர்ச்சிப் பிறழ்வுகள் (GF)
- **iv.** மெலிவடைதலுக்கான ஆபத்து இல்லாமல் மற்ற வளர்ச்சி சிக்கல்கள்
- **v.** வளர்ச்சி சிக்கல்கள் அல்லது மெலிவடைதல் இல்லை

போஷணைப் பிரச்சனை உள்ள குழந்தைகளுக்கு தேவையான துணை மருத்துவ மேலாண்மை பின்வரும் வரிசையில் கையாளப்பட வேண்டும்

- i. SAM I அடையாளம் கண்டறிதல்- பொருத்தமான பரிந்துரை மற்றும் பின்தொடர்தல் மற்றும் அவர்கள் மருத்துவமனை போசணைக் கிளினிக்/சிறுவர் மருத்துவ கிளினிக்கில் சிகிச்சை உணவு உட்பட தகுந்த பராமரிப்பை பெறுவதை உறுதிசெய்ய தேவையான ஆதரவை ஏற்பாடு செய்தல்
- ii. MAM ஆரம்பகால GF / GF மெலிதல் அபாயம் - வழக்கமான GMP இல் சிறப்பு கவனம் - திரிபோஷ / MAM மற்றும் GF க்கு பொருத்தமான குறைநிரப்பு உணவு தனிப்பட்ட ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் பின்தொடர்தல்

கிளினிக்குகளில் கலந்துகொள்வதற்கு போக்குவரத்து சிரமம் உள்ள குடும்பங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

VI. உணவு பாதுகாப்பற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பொது உணவு உதவி தேவைப்படலாம் - உணவுக் கூடை/வவுச்சர்கள் போன்றவை. (NGOs/WFP/ பிற தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவைக் கோருங்கள்), மேலும், பிற ஆதரவு சேவைகளான விற்றமின் A/நுண்போஷணைக் குறைநிரப்புகள் வழங்குவதை உறுதிப்படுத்தவும்.

இந்த குடும்பங்களில் போஷணைக் குறைபாடுள்ள குழந்தைகள் இருந்தால், அவர்களுக்கு உணவு உதவிக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

**<u>பொருளாதார நெருக்கடியின் போது குழந்தைகளின் போஷணை சேவைகளிற்கு முன்னுரிமையளிப்பதற்கான வழிகாட்டி</u>**

**MCH ஊழியர்களால் ஊட்டச்சத்துக்கான மேலாண்மை / பராமரிப்பு படிநிலை மேலிருந்து கீழாக**

i. SAM
ii. MAM
iii. மெலிவடைதலுக்கான (Wasting) அபாயத்துடனான வளர்ச்சிப் பிறழ்வுகள் (GF)
iv. மெலிவடைதலுக்கான ஆபத்து இல்லாமல் மற்ற வளர்ச்சி சிக்கல்கள்
v. வளர்ச்சி சிக்கல்கள் அல்லது மெலிவடைதல் இல்லை

கிளினிக்குகளில் கலந்துகொள்வதற்கு போக்குவரத்து சிரமம் உள்ள குடும்பங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**நெருக்கடியின் போது உணவு அல்லது பொருளாதார உதவி வழங்குவதற்கு முன்னுரிமை.**

பொருளாதார ரீதியாக பாதிக்கப்படபக்கூடிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் (வீட்டு ஆபத்துக் காரணிகளில் Z குறியீடு 8 அதாவது உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்கள்). இந்தக் குழந்தைகளிலும், மேலே குறிப்பிட்டுள்ள 1,11,111 மற்றும் 1V வகைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

**சிறப்புக் குறிப்பு** - 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நன்கொடைப் பொருட்களை வழங்கும் போது, மாவட்ட MCH ஊழியர்கள் மற்றும் MOH ஊழியர்கள், நன்கொடை அளிக்கப்பட்ட பொருட்கள், குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான உணவூட்டல் (IYCF) பரிந்துரையின் படி போஷணை பொருத்தமானதா/பாதுகாப்பானதா என்பதை பரிசோதிக்க வேண்டும் வேண்டும். உ + ம் பால் பொருட்கள் போன்றவற்றால் தாய்ப்பால் கொடுப்பதற்கு அபாயம் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டும்.